14-10-2024

MCOP. No. 184/2022

ம.சா.1 – திரு.ஷேக்தாவுத்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

விபத்தில் ஈடுபட்ட லாரி அனுமதி சீட்டு இல்லாமல் அந்த இடத்தில் இயக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு அனுமதி இல்லாத வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் தெரிந்தே இயக்க அனுமதித்து பாலிசி விதிமுறைகளை மீறியுள்ளார் என்றால சரியல்ல. பாலிசி விதிமுறைகளை மீறியதால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு எவ்வித நஷ்டஈடும் தரவேண்டியததில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு நஷ்டஈடு தர வேண்டும் ன்று சொன்னால சரியல்ல. இந்த விபத்தானது லாரி ஓட்டுநரின் கவனகுறைவால் நடைபெறவில்லை எனறு சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் மெதுவாகவும் , கவனத்துடனும் சாலை விதிமுறைகளை கடைபிடித்து தான் வாகனத்தை ஓட்டிவந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் நடராஜன் என்பவர் எனது பின்னால் உட்கார்ந்து வர நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இருந்தது. அது என்னிடம் உள்ளது. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியாமல் எனது வாகனத்திற்கு காப்பீடு எதுவும் இன்றி அதிகவேகத்துடன் வாகனத்தை ஓட்டிச்சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை கவனிக்காமல் கவனக்குறைவுடன் சென்றதால் விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் நான் கவனக்குறைவுடன் வருவரை பார்த்து உடனடியாக வாகனத்தை நிறுத்தியுள்ளார் என்றும், நான் தான் லாரி மீது மோதியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த தேதியில் இருந்து தற்போது வரை தொடர் சிகிச்சை மேற்கொண்டு வருகிறேன் என்பதை காட்டுவதற்குரிய ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது மனுவிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளது போல் செப்பல் கடை நடத்திவருவதை காட்டுவதற்குரிய எந்த

ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1991 ம் ஆண்டிலிருந்து கடை நடத்தி வருகிறேன். அதற்கான நகராட்சி ரசீது வைத்துள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், நான் சொல்வது போல் 1991 ம் ஆண்டிலிருந்து கடை நடத்தி வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஏலக்காய் பயிர் செய்து மாதம் ரூ.50,000/- சம்பாதித்து வருவதற்குரிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களை நிரூபிக்கும் வகையில் சம்மந்தப்பட்ட மருத்துவமனையை சார்ந்த அலுவலர்களை விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் தேவைபட்டால் விசாரிக்கலாம். ம.சா.ஆ-4 பில்லில் கண்ட தொகை ம.சா.ஆ-5 யை உள்ளடக்கியது என்று சொன்னால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும ஏற்படவில்லை ன்றால் சரியல்ல. தற்போது நான் வேலை பார்த்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள நஷ்ட ஈட்டு தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல் என்றால் சரியல்ல. நஷ்ட ஈட்டு தொகையை 2 ம் எதிர்மனுதாரிரின் நிறுவனம் எனக்கு செலுத்த வேண்டியது இல்லை என்றாலும் 2 ம் எதிர்மனுதாரருக்கு எதிரராக இந்த மனு தள்ளுபடி செய்யபடவேண்டியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court,*
*interpreted/read over to the witness and*
*admitted by the deponent to be correct.*
*Sd/- K. Kavitha*

Chief Judicial Magistrate,
Theni.